மனிதநேய வார விழா அறிக்கை

ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி) நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இணைந்து நடத்திய "மனிதநேய வார விழா" திருவரம்பூர் வட்டம், சோழமாதேவி கிராமத்தில் 26.01.2018 அன்று முற்பகல் 11.00 மணியளவில் இனிதே நடைபெற்றது.

மனிதநேய வார விழாவின் முதல் நிகழ்வாக சோழமாதேவி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவிலுள்ள திடலில் கிராம பிரமுகர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஜமால் முஹம்மது கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் உள்ளிட்ட சுமார் 100 நபர்கள் கலந்து கொண்ட நிகழ்வில், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் மு. அன்வர் சாதிக் அவர்கள் **"வேற்றுமையில் ஒற்றுமை"** என்ற தலைப்பிலும், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திரு. S. அக்பர் அலி அவர்கள் **"மனிதநேயத்தின் முக்கியத்துவம்"** என்ற தலைப்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் ரொட்டிக்கட்டுகள் வழங்கப்பட்டது.

அன்றைய நாளின் அடுத்த நிகழ்வாக சோழமாதேவி அரசினர் ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியில் உள்ள 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்கள் மத்தியில் மனிதநேய வார விழா அனுசரிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. சு. திருமலைச்சாமி, ஆசிரியப்பெருமக்கள் மற்றும் நவல்பட்டு கிராம முன்னாள் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

இவ்விழாவில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் மு. அன்வர் சாதிக் அவர்கள் **"மனிதநேயத்தினை வளர்ப்பதில் கல்வியின் பங்கு"** என்ற தலைப்பிலும், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திரு. S. அக்பர் அலி அவர்கள் **"மனிதநேயத்தினை வளர்ப்பதில் குடும்பத்தின் பங்கு"** என்ற தலைப்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

விழாவின் இறுதியில் 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் சுமார் 60 நபர்களுக்கு எழுதுகோல் மற்றும் ரொட்டிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொண்ட சுமார் 25 நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர். A.K. காஜா நஜீமுதீன் சாஹிப் அவர்கள், பொருளாளர் ஹாஜி M.J. ஜமால் முஹம்மது சாஹிப் அவர்கள், உதவி செயலர் முனைவர் K. அப்துல் சமது அவர்கள், முதல்வர் முனைவர் S. இஸ்மாயில் முகைதீன் அவர்கள் துணை முதல்வர் முனைவர் A. முஹம்மது இப்ராஹீம் அவர்கள் கூடுதல் துணை முதல்வர் முனைவர். M. முஹம்மது சிகாபுதீன் அவர்கள் சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் K.N. அப்துல் காதர் நிஹால் அவர்கள், விடுதி இயக்குநர்கள் முனைவர் K.N.முஹம்மது பா.ஜில், திரு. M.A. ஜமால் முஹம்மது யாஸீன் ஜுபைர் அவர்கள் மற்றும் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் M. காமராஜ் அவர்கள் வாழ்த்தினார்கள்.